# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.190/மா/2025
நாள் 17.10.2025

S.V. உதயகுமார்
நாகர்கோவில் ...... முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி ...... எதிர் மனுதாரர்

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 29.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று பெறபட்டு 190/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 29.05.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"21.04.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு எதிரான புகார் மனுவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். அதில், நாகர்கோவில் மாநகராட்சி, வார்டு எண்.49 என்.ஜி.ஓ காலனி சேனல் கரைச்சாலை (கோவில் விளை சாலை) 2023–ஆம் ஆண்டு இச்சாலை பகுதியில் பாதாள சாக்கடை திட்ட உத்தேசம் இருந்தபோதிலும், அதனை கருத்தில் கொள்ளாமல் சாலை அமைக்கப்பட்டது. அதன் பின்னர் குறுகிய காலத்தில் சாலையின் நடுவே பாதாள சாக்கடை திட்டக் குழாய்கள் பதிக்கப்பட்டதன் காரணமாக சாலையில் பழுது ஏற்பட்டது. இப்பழுதினை மட்டும் சரி செய்திட வாய்ப்பு மற்றும் சாலையின் தரம் நன்றாக இருந்த போதிலும் சாலையின் முழு அகலத்திற்கும் தார் அமைத்திட ஏதுவாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மறு மதிப்பீடு செய்து, 2024ஆம் ஆண்டு மீண்டும் தாரிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சாலை 2026 ஆம் ஆண்டு வரை (மூன்று ஆண்டுகள்) பயன்படுத்துவதற்கு பதிலாக மறு ஆண்டு மீண்டும் முழு சாலைக்கும் தார் சாலை அமைக்கப்பட்டது ஏற்புடையதாக இல்லை. குறைந்த மதிப்பீட்டில் பேட்ச் ஒர்க் செய்வதற்கு பதிலாக நல்ல நிலையில் இருந்த சாலை பகுதியையும் சேர்த்து மொத்த சாலைக்கும் குறுகிய காலத்தில் தார் சாலை அமைக்கப்பட்டு பெரும் தொகை கமிஷனாக பெறப்பட்டது மட்டுமின்றி அரசுக்கு மிகுதியான நிதி இழப்பு ஏற்பட்டதன் காரணமாக உரிய தணிக்கை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதன் விவரத்தினை தெரிவிக்கவும் கேட்டுக் கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 09.08.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் இ1/9600/2024–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 49–ல் உள்ள NGO-காலனி சானல் கரை ஓரம் உள்ள சாலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்குகள் அருகே உள்ள STP-யில் இருந்து சுத்திகரிப்பு செய்து வெளியேற்றம் செய்யப்படும் கழிவுநீரானதை STP-யில் இருந்து 5.45 கி.மீ. தூரம் உள்ள திருநகர் என்ற பகுதியில் உள்ள பாசன கால்வாய் கொண்டு கலந்திட வேண்டியுள்ளதால் அதன் வழியோர பகுதியான சானல் கரை ஓரம் பிரதான குழாயானது பதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் சேதமடைந்த சாலையினை பொதுமக்கள் நலன் கருதி முழுமையாக சரிசெய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் மேற்படி பணியில் விதிமீறல் ஏதும் ஏற்படவில்லை என்ற விவரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கூறிய இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"2023–ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி, வார்டு எண்.49 என்.ஜி.ஓ காலனி சேனல் கரைச்சாலை வரை (கோவில் விளை சாலை) பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் உத்தேசம் இருந்தபோதிலும், அதனை கருத்தில் கொள்ளாமல் சாலை அமைக்கப்பட்டது. குறுகிய காலத்தில் சாலையின் நடுவே பாதாள சாக்கடை திட்டக்குழாய்கள் பதிக்கப்பட்டதன் காரணமாக சாலையில் பழுது ஏற்பட்டு இப்பழுதினை சரி செய்திட வாய்ப்பு மற்றும் சாலையின் தரம் நன்றாக இருந்த போதிலும், சாலையின் முழு அகலத்திற்கும் தார் அமைத்திட 3 ஆண்டுகளுக்கு முன்பே மறு மதிப்பீடு செய்து, 2024ஆம் ஆண்டு மீண்டும் தாரிடப்பட்டுள்ளது. 2023–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சாலை 2026ஆம் ஆண்டு வரை (3 ஆண்டுகள்) பயன்படுத்துவதற்கு பதிலாக மறு ஆண்டு மீண்டும் முழு சாலைக்கும் தார் சாலை அமைக்கப்பட்டது ஏற்புடையதாக இல்லை. குறைந்த மதிப்பீட்டில் பேட்ச் ஒர்க் செய்வதற்கு பதிலாக நல்ல நிலையில் இருந்த சாலை அமைக்கப்பட்டு பெரும் தொகை கமிஷனாக பெறப்பட்டது.

மேலும், இம்மாதிரியான பொருட்பாடுகள் கொண்ட செலவினங்கள் மன்றத்தில் வைத்து விவாதம் நடத்தாமல் அனுமதி கோரி மட்டும் வைக்கப்படுகிறது. இம்மாதிரியான நிகழ்வுகளில் மாமன்ற உறுப்பினர்கள் விவாதம் நடத்த வழிவகையில்லை. இது மாதிரியான தவறுகள் தொடர்ச்சியாக நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்று வருகிறது.

எனவே, அரசுக்கு மிகுதியான நிதி இழப்பு ஏற்பட்டதற்கான காரணமாக உரிய தணிக்கைக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து வேண்டுகிறேன்.

மேற்கண்ட புகார்கள் குறித்து 31 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–I இத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்."

6. நாகர்கோவில் மாநகராட்சி இளநிலை பொறியாளர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 49–ல் உள்ள NGO-காலனி சானல் கரை ஓரம் உள்ள சாலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்குகள் அருகே உள்ள STP-யில் இருந்து சுத்திகரிப்பு செய்து வெளியேற்றம் செய்யப்படும் கழிவுநீரானதை STP-யில் இருந்து 5.45 கி.மீ. தூரம் உள்ள திருநகர் என்ற பகுதியில் உள்ள பாசன கால்வாய் கொண்டு கலந்திட வேண்டியுள்ளதால் அதன் வழியோர பகுதியான சானல் கரை ஓரம் பிரதான குழாயானது பதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் சேதமடைந்த சாலையினை பொதுமக்கள் நலன் கருதி முழுமையாக சரிசெய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் மேற்படி பணியில் விதிமீறல் ஏதும் ஏற்படவில்லை என்ற விவரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

2023–ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி, வார்டு எண்.49 என்.ஜி.ஓ காலனி சேனல் கரைச்சாலை வரை (கோவில் விளை சாலை) பாதாள சாக்கடை அமைக்கும், உத்தேச திட்டம் இருந்தபோதிலும், அதனை கருத்தில் கொள்ளாமல் சாலை அமைக்கப்பட்டது என்பதும், குறுகிய காலத்தில் சாலையின் நடுவே பாதாள சாக்கடை திட்டக்குழாய்கள் பதிக்கப்பட்டதன் காரணமாக சாலையில் ஏற்பட்ட பழுதினை சரி செய்திட, சாலையின் தரம் நன்றாக இருந்தும், குறைந்த மதிப்பீட்டில் பேட்ச் ஒர்க் செய்வதற்கு பதிலாக 2023–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நல்ல நிலையில் இருந்த சாலையினை 2026ஆம் ஆண்டு வரை (3 ஆண்டுகள்) பயன்படுத்தாமல் அடுத்த ஆண்டே தார் சாலை அமைத்தது என்பதும், இதற்கு பெரும் தொகை கமிஷனாக பெறப்பட்டது என்பதும், இம்மாதிரியான பொருட்பாடுகள் கொண்ட செலவினங்கள் மன்றத்தில் வைத்து மாமன்ற உறுப்பினர்களால் விவாதம் நடத்தாமல் அனுமதி கோரி மட்டும் வைக்கப்படுவதும், இம்மாதிரியான தவறுகள் தொடர்ச்சியாக நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெறுகிறது என்பதும், அரசுக்கு மிகுதியான நிதி இழப்பு ஏற்பட்டதற்கு காரணமாக உள்ளதால் உரிய தணிக்கைக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை கோரியுள்ளதை மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 49–ல் உள்ள NGO-காலனி சானல் கரை ஓரம் உள்ள சாலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்குகள் அருகே உள்ள STP-யில் இருந்து சுத்திகரிப்பு செய்து வெளியேற்றம் செய்யப்படும் கழிவுநீரானது STP-யில் இருந்து 5.45 கி.மீ. தூரம் உள்ள திருநகர் என்ற பகுதியில் உள்ள பாசன கால்வாய் கொண்டு கலந்திட வேண்டியுள்ளதால் அதன் வழியோர பகுதியான சானல் கரை ஓரம் பிரதான குழாயானது பதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் சேதமடைந்த சாலையினை பொதுமக்கள் நலன் கருதி முழுமையாக சரிசெய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதும், மேற்படி பணியில் விதிமீறல் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவித்திருப்பது நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 49–ல் உள்ள NGO-காலனி சானல் கரை ஓரம் உள்ள சாலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்குகள் அருகே உள்ள STP-யில் இருந்து சுத்திகரிப்பு செய்து வெளியேற்றம் செய்யப்படும் கழிவுநீரானது STP-யில் இருந்து 5.45 கி.மீ. தூரம் உள்ள திருநகர் என்ற பகுதியில் உள்ள பாசன

கால்வாய் கொண்டு கலந்திட வேண்டியுள்ளதால் அதன் வழியோர பகுதியான சானல் கரை ஓரம் பிரதான குழாயானது பதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் சேதமடைந்த சாலையினை பொதுமக்கள் நலன் கருதி முழுமையாக சரிசெய்யப்பட்டதாகவும், இச்சாலை பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும், இதில் விதிமீறல் ஏதும் ஏற்படவில்லை என்று நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுதாரர் புகார் தொடர்பாக—

(1) அண்ணா பல்லைக் கழக பொறியியல் பேராசிரியர் உள்ளடக்கிய ஒரு குழு அமைத்து மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள சாலையினை கள ஆய்வு மேற்கொண்டு சாலையின் முழு அகலத்திற்கும் குறுகிய காலத்தில் தார் அமைத்திட தேவையுள்ளதா என்பது குறித்து, அக்குழுவின் அறிக்கையை பெற்றும்,

(2) மேற்கண்ட சாலை அமைத்ததில் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறதா, நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கையை பெற்றும்,

அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு,
பார்வதிபுரம்,நாகர்கோவில்—629 003.

(2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

23/10/25
செயலாளர்.